# Recent News Coverage (செய்தித்தாளில் செயல்பாடுகள்)

தினகரன்

3/4

## கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத்தில்

# சர்வதேச யோகா தினவிழா

**செய்யாறு, ஜூன் 22:** செய்யாறு அடுத்த கீழ்நெல்லி கிராமத்தில் உள்ள வேளான் அறிவியல் மையத்தில் சர்வதேச யோகா தினம் மற்றும் நல்வாழ்வு விழா நேற்று நடந்தது. அறிவியல் மைய மூத்த விஞ்ஞானி சுரேஷ் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி வாரிய தலைவர் எஸ்.ரமேஷ் கலந்து கொண்டு யோகாவின் முக்கியத்துவம் குறித்து பேசினார். மேலும், தொழில்நுட்ப வல்லுநர் ரமேஷ்ராஜா, யோகா மனிதனின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும், மன உறுதியையும் எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை விளக்கி, பல்வேறு யோகாசனங்கள் மற்றும் பிராணாயாம பயிற்சி செய்து காட்டினார்.

காஞ்சிபுரம் திருமூலர் யோக மையத்தை சேர்ந்த யோகா ஆசிரியர் கார்த்திகேயன், ராஜேந்திரன் ஆகியோர், மனிதகுலத்தின் நல்வாழ்வுக்கான யோகாசன பயிற்சிகள் குறித்து விளக்கி, முக்கியமான யோக முத்திரைகளை செய்து காண்பித்தனர். இதில், விவசாயிகள், வேளாண் அறிவியல் மைய ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் தொழில்நுட்ப வல்லுநர் மார்க்ரெட் நன்றி கூறினார்.

## கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத்தில்

# விவசாயிகள் இரட்டிப்பு வருமானம் பெற விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல்

**செய்யாறு, ஜூலை 17:** செய்யாறு அடுத்த கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத்தில் 92வது இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக நிறுவன நாள் விழாவில் விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் மத்திய விவசாயத்துறை அமைச்சர் காணொலி வாயிலாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மாநில வாரியாக செயலாற்றிய வெற்றியின் விபரங்களை விவசாயிகளிடையே பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி வே.சுரேஷ் விவசாயிகளிடையே விவசாயத்தில் இரட்டிப்பு வருமானம் பெற கடைபிடிக்க வேண்டிய நவீன உத்திகள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கினார்.

வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் ந.ரமேஷ்ராஜா இயற்கை விவசாயத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய புதிய உத்திகள் பற்றியும் இயற்கை விவசாயத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

வேளாண் அறிவியல் மைய மனையியல் தொழில் நுட்ப வல்லுநர் த.மார்க்ரெட் நிலக்கடலையில் மதிப்பு கூட்டுதல் பற்றியும் அதில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உள்ள சந்தை நிலவரம் பற்றியும் விளக்கினார்.

கால்நடை அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் கா.மாயகிருஷ்ணன் கால்நடை மேலாண்மை பற்றி விவரித்தார்.

நிகழ்ச்சியில் 142 விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். உழவியல் தொழில் நுட்ப அலுவலர் ம.ஐஸ்வர்யா நன்றி கூறினார்.


**அப்ஃருவ்டு மனைகள் விற்பனைக்கு**

காஞ்சிபுரம், உத்திரமேரூர் சாலை, ஓரிகை,
கமுக்கப்பள்ளம், வளத்தோட்டம், DAZZLING HOMES
மனைப்பிரிவில் 24'x35'=840 சதுரடி அளவுள்ள
மனை சதுரடி ரூ.800 தவணை முறையிலும் விற்கப்படும்.

தொடர்புக்கு:

**94424 85178, (0413) 2600378**

16-07-2022

# BREAKING NEWS

கலாம் யுத்தம்
செய்திகள்




திருவண்ணாமலை மாவட்டம் வேளாண் அறிவியல் மையம், கீழ்நெல்லியில் 92 வது இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக நிறுவன நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது . இந்நிகழ்ச்சியில் இந்தியாவின் விவசாயத்துறை அமைச்சர் காணொலி வாயிலாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மாநில வாரியாக செயலாற்றிய வெற்றியின் விபரங்களை விவசாயிகளிடையே பகிர்ந்து கொண்டார். வரும் காலங்களில் விவசாயத்தில் கடைபிடிக்க வேண்டிய இயற்கை வேளாண்மை உத்திகள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார் . இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் வே.சுரேஷ் அவர்கள் விவசாயகளிடையே விவசாயத்தில் இரட்டிப்பு வருமானம் பெற கடைபிடிக்க வேண்டிய நவீன உத்திகள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கினார் . வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் ந.ரமேஷ்ராஜா விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் இயற்கை விவசாயத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய புதிய உத்திகள் பற்றியும் இயற்கை விவசாயத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கமாக பதிலும் அளித்தார். வேளாண் அறிவியல் மைய மனையியல் தொழில் நுட்ப வல்லுநர் திருமதி.த.மார்க்ரெட் அவர்கள் நிலக்கடலையில் மதிப்பு கூட்டுதல் பற்றியும் அதில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உள்ள சந்தை நிலவரம் பற்றியும் விளக்கினார். கால்நடை அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் மரு.கா.மாயகிருஷ்ணன் அவர்கள் கால்நடை மேலாண்மை பற்றி விவரித்தார் . இந்நிகழ்ச்சியில் 142 விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். முடிவில் வேளாண் அறிவியல் மைய உழவியல் தொழில் நுட்ப அலுவலர் செல்வி ம.ஐஸ்வர்யா அவர்கள் நன்றி கூறினார் .

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு : 9345792477,9626881996